வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி-18.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவின் மலாவி பயணத்தின் போது,இன்று இந்தியாவிற்கும் மலாவிக்கும் இடையே, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், கர்மயோகி சப்தாஹ் என்னும் தேசியக் கற்றல் வாரத்தை தொடக்கி வைக்கிறார்.

தூர்தர்ஷன், ஆகாஷ்வாணி உள்ளிட்ட ஊடகப் பிரிவுகளுக்கு உள்ளடக்கம் தயாரிக்க, பொதுப் பிரிவு ஒன்றை அமைக்கலாம் என, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், தீபாவளிக்கான கைத்தறி ஆடைகள் விற்பனைக் கண்காட்சியை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இன்று மலாவியில், அந்நாட்டு அதிபர் திரு லாசரஸ் சக்வேரா-வுடன் இருதரப்புக் கூட்டம் நடத்தினார். பிரதிநிதிகள் நிலையிலும் அவர் பேச்சு வார்த்தை நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையே, கலை-கலாச்சாரம், விளையாட்டு, இளைஞர் விவகாரங்கள் மற்றும் மருந்து உற்பத்தி துறை தொடர்பாக, 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. மலாவிக்கு ஆயிரம் டன் அரிசி வழங்கப்படும் என்றும் இந்தியா அறிவித்துள்ளது. குடியரசு தலைவர் இன்று மலாவியில் உள்ள போர் நினைவுச் சின்னத்தையும், நேரில் சென்று பார்வையிட்டார்.

**தன்கர்**

இந்தியாவின் தார்மீகக் கட்டமைப்பில் மனித உரிமைகளுக்கு எப்போதுமே முக்கிய இடம் இருந்து வருவதாக. குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், இந்திய அரசியல் சாசனம் மனித உரிமைகளை அடையாளம் காட்டும் துருவ நட்சத்திரமாகவே திகழ்வதாகவும், அரசியல் சாசனத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள நீதி-சுதந்திரம்-சமத்துவம் என்ற கொள்கையே மனித உரிமைகளின் சாரம் என்றும் கூறினார். பாகுபாட்டின் எந்த ஒரு வடிவத்தையும், மனித உரிமையின் அடிப்படை அம்சங்களுக்கு எதிரான சவாலாகவே கருத முடியும் என்று குடியரசு துணைத் தலைவர் கூறினார். மக்கள் தான் மிகப் பெரிய மனித உரிமைக் காவலர்கள் என்றும் மற்றவர்களின் மனித உரிமைகளை

மதிப்பதும், நம் சொந்த உரிமைகளை மதிப்பதும் ஒன்று தான் என்றும் குடியரசு துணைத் தலைவர் கூறினார். தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பொறுப்பு தலைவர் திருமதி விஜயபாரதி சயானி, ஆணையத்தின் தலைமை செயல் அதிகாரி திரு பரத் லால் உள்ளிட்டோர், விழாவில் கலந்து கொண்டனர்.

*மோடி-கர்மயோகி*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், கர்மயோகி சப்தாஹ் என்னும் தேசியக் கற்றல் வாரத்தை தொடக்கி வைக்கிறார். கர்மயோகி இயக்கத்திற்கான iGOT இணையதளம் மூலம், திறன் வளர்ச்சி தொடர்பான, குறைந்த பட்சம் 4 மணி நேர ஆன்-லைன் பாடங்களை, ஒவ்வொரு அரசு ஊழியரும் பயின்று முடிக்க, கர்மயோகி வாரத்தின் போது முக்கியத் துவம் அளிக்கப்படும். அரசு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் பணிகள், முற்றிலும் மக்களை மையமாகக் கொண்டு அமைவதை உறுதிப்படுத்தும் வகையில் துறை சார்ந்த நிபுணர்கள் இந்த ஒரு வார காலத்தில் இணையவழி கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் மற்றும் உரை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர். பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் சார்பிலும் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தனிப்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் அரசுத் துறைகளின் அமைப்பு ரீதியிலான திறன்களை ஒரே சமயத்தில்

மேம்படுத்துவதற்கான மிகப் பெரிய இயக்கமாக தேசியக் கற்றல் வாரம் அமைவதும் குறிப்பிடத் தக்கது.

*மோடி-ரஷ்யா*

பிரதமர் திரு நரேந்திர மோடி, 16-ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, வரும் 22-ஆம் தேதி ரஷ்யாவிற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற உள்ள இம்மாநாட்டில், நியாயமான உலக மேம்பாடு மற்றும் பாதுகாப்பிற்கான பலதரப்பு முயற்சிகளை வலுவாக்குதல் என்ற கருப்பொருள் அடிப்படையில் விவாதங்கள் இடம் பெறும். சர்வதேச பிரச்சனைகளைத் தலைவர்கள் விவாதிப்பதற்கான முக்கிய மேடையாக அமைய உள்ள இம்மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, பிரிக்ஸ் உறுப்புநாடுகள் மற்றும் அழைப்பு நாடுகளின் தலைவர்களையும். இருதரப்பு ரீதியில் பிரதமர் சந்திக்க இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ராஜ்நாத்*

நவீன போர் நுட்பங்களின் அடிப்படையிலான டிரோன்கள், உயிரி-ஆயுதங்கள், சைபர் தாக்குதல் போன்ற மரபு சாராப் போர் முறைகளால், பாதுகாப்புத் துறைக்கு புதிய சவால்கள் ஏற்பட்டுள்ளதால் இந்த சவால்களை திறம்பட்ட முறையில் எதிர்கொள்ள தேவையான புதுமையாக்க முயற்சிகளை தொடர்ந்து ஊக்குவித்தல் அவசியம் என்று

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பின் 5-ஆவது Dare to Dream புதுமையாக்க போட்டியின் துவக்க விழாவில் உரையாற்றிய அவர் எல்லாத் துறைகளிலும் புதுமையாக்க முயற்சிகளை அரசு ஊக்குவித்து வருவதாகவும், குறிப்பாக பாதுகாப்புத் துறையில் புதுமையான தொழில் நுட்பங்களை புகுத்த, உயர் முக்கியத் துவம் அளிக்கப்படுவதாகவும் கூறினார். பாதுகாப்புத் துறையில் தனியார் பங்கேற்பு அதிகரிக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

*ஜார்கண்ட்*

ஜார்கண்டில் 43 தொகுதிகளுக்கு நவம்பர் 13-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு வேட்பு மனு தாக்கல் தொடங்கி உள்ளது. வேட்புமனுக்களை வரும் 25-ஆம் தேதி வரை தாக்கல் செய்யலாம் என்றும், வேட்புமனுப் பரிசீலனை 28-ஆம் தேதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 30-ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும். 2 கட்ட ஜார்கண்ட் சட்டமன்ற தேர்தலில், 2-ஆவது மற்றும் இறுதி கட்ட தேர்தல் வாக்குப் பதிவு, நவம்பர் 20-ஆம் தேதி நடைபெறும். 2 கட்டங்களிலும் பதிவான வாக்குகள், நவம்பர் 23-ஆம் தேதி எண்ணப்படும்.

இதற்கிடையே, ஜார்கண்ட் சட்டமன்ற தேர்தலுக்கான தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் தொகுதிப் பங்கீட்டு விவரங்களும் இன்று அறிவிக்கப் பட்டுள்ளன. இதன்படி, பிஜேபி 68 தொகுதிகளில் போட்டியிடும் என்று ஜார்கண்ட் சட்டமன்ற தேர்தலுக்கான கட்சியின் இணை பொறுப்பாளர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா, இன்று ராஞ்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். 10 தொகுதிகள், AJ-SU கட்சிக்கு ஒதுக்கப்படும் என்றும், ஐக்கிய ஜனதா தள கட்சிக்கு 2 இடங்கள், மற்றும், திரு சீராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முருகன்

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று பெங்களூரில், தமது அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பல்வேறு ஊடகப் பிரிவுகளின் செயல்பாடுகளை மறுஆய்வு செய்தார். தூர்தர்ஷன், ஆகாஷ்வாணி, பத்திரிக்கை தகவல் அலுவலகம் உட்பட அமைச்சகத்தின் பல்வேறு ஊடகப் பிரிவுகளுக்கு தேவையான உள்ளடக்கத்தை தயாரிக்க, பொதுப் பிரிவு ஒன்றை அமைக்கலாம் என அவர் யோசனை வெளியிட்டார். தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் முக்கிய கோவில்களின் செயல்பாடுகள் குறித்து செய்தி வெளியிட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். பொது ஒலிபரப்பு

அமைப்புகள், கள அளவில் இறங்கிப் பணி புரிந்து முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் பிரபலங்களின் குரல் பதிவைப் பெற்று வெளியிட வேண்டும் என்றும் முக்கிய பிரச்சனைகள் குறித்து விவாத நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்றும், அமைச்சர் அறிவுறுத்தினார்.

*ரங்கசாமி-கைத்தறி*

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, புதுச்சேரியில், மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் கைத்தறி ஆடைகள் விற்பனைக் கண்காட்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு நேரு, திரு கே எஸ் பி ரமேஷ், மற்றும் பொது மக்கள் பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பழைய திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகே வரும் 30-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த தீபாவளி கைத்தறி கண்காட்சியில் பெண்களுக்கான எழில் மிகு கைத்தறி சேலைகள், பாலியெஸ்டர் சேலைகள், தரமான கைத்தறி கைலிகள், வேட்டி-துண்டுகள், படுக்கை விரிப்புகள், போர்வைகள் மற்றும் தலையணை உறைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அரசு ஊழியர்கள் துணி வாங்கி தவணை முறையில் பணம் செலுத்த ஏதுவாக 5 ஆயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை கடன் வசதியும் அளிக்கப்படுகிறது.

*புதுச்சேரி-போனஸ்*

புதுச்சேரியில் மாநில அரசு ஊழியர்களுக்கு தீபாவளி போனஸ் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி உற்பத்தி சாராத அரசு ஊழியர்கள், தலா 7 ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் போனஸ் பெறுவார்கள். மொத்தம் சுமார் 23 ஆயிரம் அரசு ஊழியர்களுக்கு போனஸ் கிடைக்கும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*குலோத்துங்கன்*

புதுச்சேரியில் செயல்பட்டு வரும், குழந்தைகளுக்கான பல்வேறு காப்பகங்களை, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அரியாங்குப்பம் அரசு கண்காணிப்பு இல்லம், நோணாங்குப்பம் உதவிக் கரங்கள் குழந்தைகள் இல்லம், ரெட்டியார்பாளையம் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் இல்லம் ஆகியவை இதில் அடங்கும். இந்த ஆய்வின் போது, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு, உடை, இருப்பிடம், கல்வி, மற்றும் மருத்துவ உதவிகள் குறித்தும், இளஞ்சிறார் நீதி சட்டத்தின் படி இந்த வசதிகள் வழங்கப்படுகிறதா என்பது குறித்தும் அவர் கேட்டறிந்து, தேவையான வசதிகளை வழங்க அறிவுறுத்தினார். துறை இயக்குநர் செல்வி முத்து மீனா மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

*காப்பி எடிட்டர்*

ஓர் அறிவிப்பு

புதுச்சேரி ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஒரு Copy Editor பணியிடத்திற்கு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 35-வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகள், ஊடகத் துறையில் 5 ஆண்டு அனுபவம் பெற்றிருந்தால், இதற்கு விண்ணப்பிக்கலாம். இதழியல், வெகு ஜனத் தொடர்பியல், மற்றும் சம்பந்தப்பட்ட இதர துறைகளில் பட்டம் அல்லது முதுகலைப் பட்டயம் பெற்றவர்களாக இருந்தால், 3 ஆண்டு ஊடகத் துறை அனுபவம் போதுமானது. விண்ணப்ப தாரர்கள், இந்தி அல்லது ஆங்கிலம், மற்றும், தமிழில் மொழித் திறன் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத் தேடுதல் பொறியின் பயன்பாட்டில் அனுபவம் உள்ளவர்களாகவும், நடப்பு விவகாரங்கள், பிராந்தியப் பிரச்சனைகள், மற்றும் தேசியப் பிரச்சனைகளை அறிந்தவர்களாகவும் இருத்தல், விரும்பத் தக்க தகுதியாக கருதப்படும். ஓராண்டு காலத்திற்கான, பின்னர் நீட்டிக்கத் தகுந்த, இந்த முழுநேர ஒப்பந்தப் பணிக்கு, மாதம் 35 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்படும். தகுதியும், மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் பணிபுரியும் ஆர்வமும் உள்ளவர்கள், applications.prasarbharati.org என்ற இணையதளம் மூலம், உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்கலாம்.

*புதுச்சேரி-வேலை வாய்ப்பு*

புதுச்சேரியில் ரெட்டியார் பாளையத்தில் உள்ள, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்கான சேவை மையத்தில், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெற உள்ளது. 2 முன்னணி நிறுவனங்கள் பங்கேற்கும் இந்த வேலை வாய்ப்பு முகாமில் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வேலூர், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாகை, திருவாரூர், விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 24-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

*ஜிப்மர்-காரைக்கால்*

புதுச்சேரி ஜிப்மரில் இருந்து, மூளை-தண்டுவட சிகிச்சை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சை தொடர்பான சிறப்பு மருத்துவர்கள் குழு, நாளை காரைக்கால் அரசுப் பொது மருத்துவமனையில், சிகிச்சை மற்றும்

மருத்துவ ஆலோசனைகளை வழங்க உள்ளது. ஜிப்மர் சிறப்பு மருத்துவர்கள் மாதம் 2 சனிக்கிழமைகளில் காரைக்கால் சென்று சிகிச்சை அளிக்கும் நடைமுறையின் கீழ் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதி மக்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவின் மலாவி பயணத்தின் போது,இன்று இந்தியாவிற்கும் மலாவிக்கும் இடையே, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், கர்மயோகி சப்தாஹ் என்னும் தேசியக் கற்றல் வாரத்தை தொடக்கி வைக்கிறார்.

தூர்தர்ஷன், ஆகாஷ்வாணி உள்ளிட்ட ஊடகப் பிரிவுகளுக்கு உள்ளடக்கம் தயாரிக்க, பொதுப் பிரிவு ஒன்றை அமைக்கலாம் என, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், தீபாவளிக்கான கைத்தறி ஆடைகள் விற்பனைக் கண்காட்சியை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.